உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

புதுக்கோட்டையைச் சார்ந்த

90

# தேனிமலை

# ஸ்ரீ சண்முகக்கடவுள்

## திருப்பதிகம் தோத்திரப்பதிகம் முதலியன.

23 JUN 1925
MADR

இவை

உலகன்பட்டி ஸ்ரீஞானசப்பந்த வாசகசாலையின் ஆசிரியரும், திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய சேற்றூர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியக்கவிராயரவர்கள் மாணுக்கரும் ஆகிய

ஆலங்காடு தமிழ் வித்துவான்
வை. செல்லையா செட்டியாரவர்களால்

பாடப்பெற்று

---

புதுப்பட்டி சைவத்திருவாளர்
சுப. சி. சு. சுப்பிரமணியன் செட்டியார்
அவர்களால்

---

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றன.

---


1925

குரோதனஹு சித்திரைமீ

926:417
N25

உ

THE REGISTRAR OF BOO
23 JUN 1925



தேனிமலை

# முத்துக்குமாரசுவாமி.

உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

புதுக்கோட்டையைச் சார்ந்த

# தேனிமலை

# ஸ்ரீ சண்முகக்கடவுள்

## திருப்பதிகம் தோத்திரப்பத்து முதலியன.

இவை

உலகன்பட்டி ஸ்ரீஞானசம்பந்த வாசகசாலையின் ஆசிரியரும், திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய சேற்றூர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியக்கவிராயரவர்கள் மாணாக்கரும் ஆகிய

ஆலங்காடு தமிழ் வித்துவான்

**வை. செல்லையா செட்டியாரவர்களால்**

பாடப்பெற்று

புதுப்பட்டி சைவத்திருவாளர்

**சுப. சி. சு. சுப்பிரமணியன் செட்டியார்**

அவர்களால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1925

குரோதன௵ சித்திரை௴

REGIS
23 JUN 192
MADR

894.811
2788

Q26:412
N25

77493

உ

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

—o—

அறவிடை யேறும் அமரர் பெருமான், தரணியில் வழுதியாய்த் தனியர சியற்றிய, வளமிகு பாண்டி நாட்டிடை வடபால், வானோர் வழுத்துந் தேனிமலைக்கண்

"வேதக் காட்சிக்கு முபநிடத் துச்சியின் விரிந்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியா யுயிர்க்குயி ராய்நின்ற வமலன்"

என்று கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளால் விதந்து கூறப் பெற்ற கலியுகவரதராகிய ஸ்ரீ சண்முகக்கடவுள், தம்மை வழிபடும் அடியார்கட் கருள்செய்வான் றிருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பதை யாவரு மறிந்ததே.

அஃதங்ஙனமாக,

எமது ஊரின்கணுள்ள ஸ்ரீ ஞானசம்பந்த வாசகசாலையின் ஆசிரியரும், கல்வியறி வொழுக்கங்களான் மேம்பாடுற்றவரும், குன்ற மெறிந்த குமரவேளின் றிருவடிகளே தஞ்சமெனக் கொண்டவரும் ஆகிய சைவத்திருவாளர் ஆலங்காடு வை. செல்லையா செட்டியா ரவர்கள், மூவைந்து தினங்கட்கு முன், கொடுஞ் சூலைநோயாற் பீடிக்கப்பட்டு, எவ்வாற்றானும் நோய் நீங்கப்பெறாது, ஆற்றொ ணாத் துயரெய்தி, இனி இந்நோய் எமது வழிபடுகடவுளாகிய ஸ்ரீசண்முகப் பெருமான் றிருவருளாலன்றித் தீருதலரிதாமென் றெண்ணி, சரவணபவன் சரணாரவிந்தங்களைத் தமதகத்திருத்தி இப் பதிகம் தோத்திரப்பத்து முதலியவற்றைப் பாடியருள, அடியார் வினையெலாம் பொடிபடச் செய்கின்ற எம தண்ணல் அக்கொடுஞ் சூலையை அக்கணமே நீக்கி யருள்பாலித்தனர்.

ஆதலின் இவற்றை யன்புடனோதுவார் எண்ணிய எண்ணியாங் கெய்துமாறு எமது கந்தவேள் இன்னருள் புரிவாரென்பதுதிண்ணம்.

இங்ஙனம்,

உலகன்பட்டி
6-3-1925.

பழ. சிவ. சிவராமன் செட்டியார்.

உ

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

---

இஃது

மகிபாலன்பட்டி இருமொழிப் புலவராகிய

சைவத்திருவாளர்

## மு. கதிரேசச் செட்டியாரவர்கள் இயற்றியது.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீராருந் தேனிமலைச் செவ்வேட்குப் பதிகமுந்தோத்
திரமாம் பத்தும்
நாராருஞ் சொன்மலராற் பொருண்மணக்கத் தொடுத்தணிந்து
நலம்பெற் றானால்
ஏராருந் தமிழ்மொழியி னியைசைவ நூல்கள்பல
வினிதி னாய்ந்து
பாராரும் புகழ்விளங்கப் பயிற்றுவோன் செல்லையப்
பாவல் லோனே.

---

இஃது

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர்

## சொ. பனையப்ப செட்டியாரவர்கள் இயற்றியது.

பொன்பூத்த மலர்ச்சுனைகள் புடையுடுத்த தேனிமலைப்
புனிதன் மீது
கொன்பூத்த தமிழ்மொழியாற் பதிகமுந்தோத் திரப்பாவுங்
கூறி னானால்
தென்பூத்த கலைகள்பல வாராய்ந்து பிறர்க்குதவுந்
தெருளான் மிக்கோன்
மன்பூத்த விசைமருவுஞ் செல்லையப் பெயர்கொண்ட
மதிவல் லோனே.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வெற்றிவேலுற்றதுணை.

# தேனீமலையில்

திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ சண்முகக்கடவுள்

## திருப்பதிகம்.

—o—

### விநாயகர் வணக்கம்.

நேரிசை வெண்பா.

திங்க ளுலவுதிருத் தேனீ மலைவாழும்
மங்கையொரு பங்கனருள் வள்ளலின்மேல்—மங்கலமாஞ்
செந்தமிழா லோங்குந் திருப்பதிகஞ் செய்வதற்குத்
தந்திமுகத் தெங்கோன் சரண்.

## நூல்.

பன்னிருசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

———

அம்புரா சிக்கணொரு கோடிசூ ரியருதய
மாமெனக் கதிர்கா லுநல்
லணியுற்ற நவமணி குயிற்றியொளிர் முடிகளும்
அருள்சொரியு மாறுமுகமும்
கம்புமடி யார்களுறு துன்பமக லப்புரியும்
ஞானவரு ளைக்குமடியேன்
நலியும்வெந் தீவினைப் பகையறுத் தருள்வேல்
நலம்பெற வணிந்தகரமும்
இம்பரினி லெண்ணியவை யெண்ணிய படிக்கருளு
மிணையில்பன் னிருகரத்தோ
டெளியனேற் கொருபெருந் திருவணி யெனச்சூடு
மெந்தைநின் திருவடிகளுந்

தம்பித முறக்கண் டிறைஞ்சிப் பணிந்தனன்
றமியனேற் கருள்புரிகுவாய்
தாயக மெனப்பொலிந் துலவுதே னிமலைச்
சரவண பவானந்தனே. (1)

கருவுற்ற நாளெலாங் காங்கேய வுன்னடிக்
கமலங்க ளைக்கருதுறுக்
கடையனே னுனது மிப்பிறவி தன்னிலுன்
கழலிணை மறந்தறியனே
மருவுற்ற பிணியினால் வாடிக் கிடந்துநான்
வகையேது மின்றியுன்றன்
மலரடி தனைப்பிடித் தலறுகின் றேனோடி
வந்தஞ்ச லென்றருளுவாய்
பரிவுற்று வந்திங் கெனைப்புரப் போரில்லை
பழனிகதிர் காமமுதலாம்
பதிகளும் பாவியேன் மனமுநீ கோயிலாப்
பற்றியுங் கொடியபிணியாற்
றருவுற்ற துன்பத்தி னாலடிமை வாடுதல்
தகுதியோ வருள்புரிகுவாய்
தாயக மெனப்பொலிந் துலவுதே னிமலைச்
சரவண பவானந்தனே. (2)

கண்கண்ட தெய்வமிக் கலியுகத் துணையலாற்
கருதவே றில்லையென்பார்
கடையனேன் றன்பிணி தனைப்பொடி படுத்தியருள்
காட்சியே சாட்சியாமாற்
றிண்கொண்ட சூரனைக் கிளையுடன் வேரறச்
சேதித்த வேலாயுதா
தெய்வகுஞ் சரிவள்ளி யொடுவெற்றி வேலுடன்
சேவலங் கொடிதுலங்கப்
பண்கொண்ட பச்சைப் பசுந்தோகை யேறியே
பத்தர்க ளெலாநெருங்க

பாவியேன் றன்முன்வந் தஞ்சே லுனக்கருள்
பரிந்தன மெனப்புகலுவாய்
தண்கொண்ட சோலையுந் தாமரைச் சுனைகளுஞ்
சார்ந்தவர்க் கின்பநல்குந்
தாயக மெனப்பொலிந் துலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (3)

செந்திலம் பதியனே சேவலங் கொடியனே
தேவசே னைத்தலைவனே
சிறியனேற் கொருபெருந் துணைவனே குமரனே
தெய்வகுஞ் சரிநாதனே
வெந்துயர் தரும்பிணியி னுலைப் புண்டினும்
வேதனை பொறுமலடியேன்
மெலிவுற் றிரங்கித் துடிப்பதறி யாய்கொலோ
வெற்றிவே லுற்றகரனே
நொந்துவா டிக்கந்த னேயென் றழைக்குமென்
நோய்தவிர்த் தாளாமலே
நோக்கம்வே றுயிருந் தாலெனக் கார்துணை
நுவலுவாய் புவியிலையா
தந்தியொடு சிங்கமுஞ் சண்முகா வென்றிடிற்
சாலப் பயந்தோடுமே
தாயக மெனப்பொலிந் துலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (4)

நெஞ்சினுனை யன்றியோர் கடவுளை மறந்தும்
நினைத்திடே னின்புகழலால்
நேசித் தெனுமற் றொருபுகழ் வழுத்தறு
நிமலவுன் றிருவடியலாற்
கொஞ்சமும் வேறொருவ ரைத்தாழ்ந்தி டாதென்முடி
குவலயத் துன்னையல்லாற்
கோதகற் றிப்பரிந் தாள்பவர்கள் வேறிலை
கொடுமைகொண் டென்னைவாட்டும்

நஞ்சினுங் கொடியபிணி தனையோட்டி யாளுவாய்
ஞானபண் டிதகுமரனே
நாதாந்த முடிவினின் றாடும் பராபரா
ஞானவொளி யானவுருவே
தஞ்சநீ யேயெனச் சார்ந்தனன் னடியெனைத்
தாங்கிப் புரந்தருளுவாய்
தாயக மெனப்பொலிந் துலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (5)

முருகனே முருகனே முருகனே செந்தில்வாழ்
முக்கண்ண னருள்குமரனே
மூவிரு முகத்தனே யாறிரு புயத்தனே
முளரியந் தவிசண்ணலே
வெருவுறக் குட்டிமோ திச்சிறை யடைத்தவன்
மேவுற்ற தொழில்வழுவுற
விதமும் படைத்தலைச் செய்துவிடை மேல்வரும்
வித்தகற் குப்பிரணவப்
பெருமைபெறு மந்தணப் பொருள்விரித் தருள்செயும்
பெம்மா னெனத்துதித்தே
பேதுற்ற நோயினால் வாடிக் கிடக்குமிப்
பேயேனை யஞ்சலென்பாய்
தருமேவு சூதவெஞ் சூரனைக் கீண்டருள்
தழைத்திடும் வெற்றிவேலா
தாயக மெனப்பொலிந் துலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (6)

எத்தனை விதத்திலென் குறைகளை யடுக்கா
வெடுத்தெடுத் துச்சொல்லியும்
எதிலார் போலப் பராமுகம தாயிருந்
தாலெனக் கிவ்வுலகினிற்
சுத்தவத் துவிதசித் தாந்தமெஞ் ஞானச்
சுயஞ்சோதி யாமுனைபலாற்

றன்பனைக் கிப்பரிந் தாங்பவர்க ளில்லையே
சுவாமிநீ யறியாததோ
பித்தனேன் காமப் பெருங்குழி யமிழ்ந்திடும்
பேயனறி விலினாயினும்
பேதுறுங் கீடத்தி னும்மிகத் தாழ்வுறும்
பெற்றியே னுனுமே
சத்தியம தாகவுன் றனையே நம்பினேன்
சஞ்சல மகற்றியருள்வாய்
தாயக மெனப்பொலிந் துலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (7)

தேவாதி தேவனே சிவனருமை மைந்தனே
திருமங்கை மகிழ்மருகனே
தெய்வானை வள்ளிக் குகந்தமண வாளனே
சிறியனேற் கொருதுணைவனே
மூவாத முதல்வனே முருகனே குமரனே
முக்கணற் குக்குரவனே
மூதண்ட கோடிக ளெலாமபொடி படுத்திவரு
சூரிமயி லேறுகுகனே
பாவார் பெரும்புலவ ருக்கெலாம் புலவனே
பத்தியொடு கீரனேதும்
பாவுக் கிரங்கியருள் பாலித்த நாதனே
பணிபவர்க் கனுகூலனே
தாவாத வாழ்வையன் பர்க்கருளு முன்னையே
சார்ந்தனன் னருள்புரிகுவாய்
தாயக மெனப்பொலிந் துலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (8)

செந்தமிழ்க் கீரன்சொ லாற்றுப் படைக்குளந்
தித்திக்க வந்தமுருகா
தேவசே னைத்தலைவ னேயாறு படைவீடு
திகழ்வுற் றிலங்குமுருகா

Q26:417 N25
77493

பைந்தமிழ்ப் பாவினாற் பாடுவோ ருக்கருள்
பாலித் தளிக்குமுருகா
பாதிமதி யணிவேணி நாதனுக் கொருமொழி
பகர்ந்தமெஞ் ஞானமுருகா
கந்தமுரு காமனங் கசியுமுரு காவெனது
கண்மணிக ளானமுருகா
காதலொடு மருணகிரி யோதுந் திருப்புகழ்க்
கண்ணமர்ந் தருளுமுருகா
தந்திமுக னுக்கிளைய தம்பிமுரு காவெனைத்
தாங்கிப் புரக்குமுருகா
தாயக மெனப்பொலிந் திலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (9)

பாங்குபெறு செந்தூர் பரங்கிரி திருத்தணிகை
பழநிகதிர் காமமுதலாம்
பதிகளுங் கந்தமா தனமுநீ திருவருள்
பரிந்தாடல் செய்யுமிடமாய்
ஓங்குந் திருப்பதிக ளாதல்போ லடியே
னுவக்கவித் தேனீமலை
யோங்கவி னமர்ந்தெனது சூலைக் கொடும்பிணியை
யோட்டியருள் செய்தவிதனால்
தீங்கடை வுறாதவப் பதிகளுக் கிணையுறுந்
திப்பிய திருத்தலமெனத்
தேறினே னினியெனக் கொருகுறைவும் வாராது
திகழப் புரந்தருளுவாய்
தாங்கொணாச் சஞ்சல மகற்றியெனை யாண்டவென்
றங்கமே தண்ணமுதமே
தாயக மெனப்பொலிந் திலவுதே னீமலைச்
சரவண பவானந்தனே. (10)

முற்றிற்று.

---

வெற்றிவேலுற்ற துணை.

சிவமயம்.

# தோத்திரப்பத்து.

அருள்பொழியுஞ் சண்முகத்தெம் மையா செந்தூர்
அப்பனே பன்னிருகை வேலா வாவா
மருளகற்றி யடியவரை யாளும் வைவேல்
மன்னவனே யென்னிருகண் மணியே வாவா
இருளகற்றுங் கோடிகதி ரெழுந்தா லென்ன
இலங்குமணித் திருமேனி இறைவா வாவா
தெருளளித்திங் கடியேனைக் காக்குந் தேனீத்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (1)

கன்னலமு தேயெனது கண்ணே வாவா
கருதுமடி யார்களுறுங் களிப்பே வாவா
தென்னவனே யெங்கள்குலத் தேவே வாவா
தெய்வானை வள்ளிமண வாளா வாவா
வன்னமயி லேறியருள் வழங்க வாவா
வானவர்சே னாபதியே வள்ளால் வாவா
தென்னுவென் றளிமூலத் திகழுந் தேனீத்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (2)

சண்முகநா தாவாசங் காணர் நெற்றித்
தழலேவா வடியேனைத் தாங்க வாவா
கண்மணியே யடியன்மனக் கனிவே வாவா
கலியுகமெய்ப் புகழ்வாதா கந்தா வாவா
மண்முதனு தாந்தமெலாங் கடந்து நின்ற
மறைமுதலே சித்தாந்த மணியே வாவா
திண்கொண்ட பிணியகற்றி யாண்ட தேனீத்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி, (3)

வள்ளிமன மகிழுமண வாளா வாவா
மால்மருகா வேல்முருகா மகிழ்ந்து வாவா
புள்ளிமயி லோனேபுத் தமுதே வாவா
புண்ணியமெய்ப் பண்ணவனே புனிதா வாவா
வெள்ளருவி மணிகொழித்துப் பாயுஞ் சாரல்
மேவுதினைப் புனத்தினணி விளங்க நாளுந்
தெள்ளுதமிழ்ப் புலவரெலாம் புகழுந் தேனீத்
திருமலைவா ழாறுகத் தேனே போற்றி. (4)

கந்தாவா கடம்பாவா கதிர்வே லாவா
காங்கேயா அரிமருகா காருத் தாவா
எந்தாய்வா எட்டுகுடி யிறைவா வாவா
ஏரகத்தெங் குருமணியே யிலங்க வாவா
பைந்தமிழின் பாவலனே பரிந்து வாவா
பழநிமலை மேற்பழுத்த பழமே வாவா
செந்தூரா வந்தருள்வாய் தேனீ யென்னுந்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (5

தெய்வானை வள்ளியுடன் திகழத் தெய்வத்
திருமயின்மே லேறியயிற் படை துலங்க
மெய்யடியார் புடைசூழ வருவாய் வந்தென்
வினையகற்றிப் பரிந்தருள்வாய் வெற்றி வேலா
கையிலங்குங் காவடியாட் டத்தில் நாளுங்
களித்துவிளை யாடுமருட் கந்த நாதா
செய்யவனே சித்தரெலாந் திகழுந் தேனீத்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (6)

ஓங்காரத் துட்பொருளே யுமையாள் பாலா
வுன்னடியே தஞ்சமென வுருகி நின்றேன்
நீங்காத கொடும்பிணியை நீக்கி யாண்டாய்
நின்மலனே யினியெனக்கோர் குறைவுண் டாமோ
காங்கேயா கண்கண்ட தெய்வம் நீயே
கலியுகத்தி லாமெனவே கண்டேனையா

தேங்குமருட் சித்தரெலாந் திகழுந் தேனித்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (7)

குன்றுதோ றாடுமருட் குகனே வைவேற்
கொற்றவனே பொதியமலைக் குறு முனிக்கும்
வென்றிபுனை தருமாற்றுப் படையாற் போற்றும்
மேவுமருட் கீரனுக்கும் விளங்கு மின்பந்
துன்றுதிருப் புகழருண கிரிக்கு முன்றன்
றுலங்குமரு ளளித்ததுபோ லெனையுங் காப்பாய்
சென்றுபணி பவர்க்கருளுந் தேனி யென்னுந்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (8)

தருணமையா வடியேனைத் தாங்கி யாளத்
தக்கதொரு சமயமிதே சாமி நாதா
கருணைமலை யேயடியா ரிடுக்கண் டீர்க்குங்
கற்பகமே மெய்ப்பொருளே கனிந்த பாகே
மருளகற்றி யுனதுருவ மனத்திற் கொண்டே
மாமுனிவ ரொடுஞ்சித்தர் மகிழ்ந்து வாழத்
தெருணிறையு மடியரெலாந் திகழுந் தேனித்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (9)

நந்தாத வருள்விளக்கே ஞான வாழ்வே
நாதாந்தத் துட்பொருளே நயந்து போற்ற
வந்தாளுந் திருச்செந்தூர் பழநி யன்பர்
வணங்குமயின் மலைதணிகை வளமு லாவுங்
கந்தமா தனமருண கிரியி னோடுங்
கதிர்காம முதலாகக் களிப்பி னூனுஞ்
சிந்தைமகிழ்ந் தெழுந்தருளுஞ் செல்வா தேனித்
திருமலைவா ழாறுமுகத் தேனே போற்றி. (10)

தோத்திரப்பத்து முற்றிற்று.

---

வேலுமயிலுந்துணை.

சிவகுகமயம்.

# கட்டளைக் கலித்துறை.

———o———

தேனீ மலையினிற் சித்தர்கள் போற்றச் சிறக்குமெந்தாய்
வானோர் களுக்குறும் பேரிடர் நீக்கிய வன்மைகண்டே
தானே தனக்குத் தலைவனென் றன்னடி சார்ந்துநின்றேன்
மானேர் விழிவள்ளி பங்காவென் வல்வினை மாற்றுவையே.

மாற்றமொன் றுண்டுன் மலரடி போற்றுமிவ் வாழ்வொன்றுமே
யேற்றுகந் தான்மக னேயருள் வாயெளி யேனைமிகக்
கூற்றென வாட்டுங் கொடுநோய் தவிர்த்தெனைக் கொண்டவினை
மாற்றி யருள்புரி தேனீ மலைவளர் மாணிக்கமே.

வேலுமயிலுந் துணை.

உ

# திருப்புகழ்.

---


பானேர்மொழி யாரிணை யாயுறு
மானேர்விழி யாரிரு ளாகிய
தேனூர்குழ லாரணி மாமயி லெனமேவும்
பாவாதிக ராமெனு மோவிய
மேயாமெனு மாதர்க ளாலுறு
மாபாதக மாமய லாழியி னிடைமூழ்கி
காணுவித மாகிய மோகவி
காராதிக ளாலுழல் வேனுயு
மாறோர்வழி தானரு ளாலருள் புரிவாயே
நாகாதிபன் மாலய னோடுறு
தேவாதியர் யாவரு மேமிகு
ஞானாகர மேயென வேதுதி செயமூளுஞ்
சேனாபதி யாவெதி ராய்வரு
சூராதியர் யாவரு மேகிளை
வேரோடற வேவயில் வேல்விடு மிளையோனே
சேவார்கொடி யோனுமை பாகன்ம
காதேவன்ம னோலய மாகிட
வேஞானம காமனு வோதிய குருநாதா
ானூடுற வாகிய தாமென
வேயார்தரு மேலுறு நீண்முடி
மாகாதிபர் நாடுற வேவள மிகமேவி
மாமேவிய யோகிய ரோடுறு
வானோர்முனி வோர்களு மேபணி
தேனீயெனு மாமலை மேவிய பெருமாளே.

முற்றிற்று.

---

தேனீமலையான் திருவடி வாழ்க.

026.417 N35
77493


மீனலோசனி அச்சியந்திரசாலை
தெற்குக்கோபுர வாசல்,
தொட்டியன் கிணற்றுத்தெரு,
மதுரை.